இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05-09-2024

# யாருக்கு தரம் இல்லை?

"நான் பல்வேறு கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்களிடம் பேசினேன். அவர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் போன்றவை குறித்த அறிவுத் திறன் குறைவாக உள்ளது" - இப்படி தனது திருவாய் மலர்ந்துள்ளார் தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி.

**இவர் எதற்காக செயற்கை நுண்ணறிவு குறித்துக் கேட்கிறார். அவருக்குப் பிடித்த சனாதனம் பற்றிக் கேட்டிருக்கலாமே! மாணவர்கள் புட்டுப்புட்டு வைத்திருப்பார்களே! பத்துப் பேரைக் கூட்டி வைத்துக் கொண்டு 'திராவிட' வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கும் இவர், மாணவர்களிடம் 'திராவிடம்' பற்றிக் கேட்டிருக்கலாமே. தீர்க்கமாய் பதில் சொல்லி இருப்பார்களே மாணவர்கள்?**

**எப்போது பார்த்தாலும் ஆரியம், திராவிடம், சனாதனம், வர்ணாசிரமம், திருவள்ளுவர், வள்ளலார் என்றுதானே அவர் மேடைகளில் பேசிக் கொண்டு இருந்தார். திடீரெனத் திருந்தி செயற்கை நுண்ணறிவு பற்றி எல்லாம் எப்போது படிக்க ஆரம்பித்தார்?**

**'சிவில்' மாணவர்களிடம் போய் ரோபோடிக்ஸ் பற்றி கேட்டிருப்பாரோ என்னவோ?**

"நவீன தொழில் நுட்பத்தை பள்ளியிலேயே மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். தமிழ்நாட்டு பாடத்திட்டத்தை தேசிய பாடத் திட்டத்துடன் ஒப்பிடும் போது தரம் குறைவாக உள்ளது" என்கிறார் ஆளுநர். என்ன தரம் குறைவாக இருக்கிறது என்பதை அவரால் சொல்ல முடியுமா? ஏதோ ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்கு கூப்பிட்டார்கள் என்பதற்காக அங்கே போய் நின்று கொண்டு தமிழ்நாட்டில் படிக்கும் லட்சக்கணக்கான பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரைக் கொச்சைப்படுத்துவதா? இதற்கு தான் அவருக்கு தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் தரப்படுகிறதா?

**தமிழ்நாட்டின் உயர்கல்வி எத்தகைய சிறப்பாக இருக்கிறது என்பதை உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி அவர்களும், பள்ளிக் கல்விப் பாடத்திட்டங்கள் எவ்வளவு சிறப்பாக இருக்கின்றன என்பதை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் நெஞ்சை நிமிர்த்தி பதில் சொல்லி இருக்கிறார்களே? அவர்களுக்கு ஆளுநரால் பதில் சொல்ல முடியுமா?**

**இந்தியாவிலேயே தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறை இரண்டாவது இடத்தில் இருக்கிறது. 'கல்விதான் உங்களிடம் இருந்து பிரிக்க முடியாத சொத்து' என்று சொல்லி தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையையும், உயர் கல்வித் துறையையும் வளர்த்து வருகிறார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனைக் கொச்சைப்படுத்துவதற்காகவே இப்படிச் செய்து கொண்டிருக்கிறார் ஆளுநர்.**

இந்த ஆண்டு 7,60,606 மாணவர்கள் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளனர். இதில் 94.56 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளார்கள். மொத்தமுள்ள மேல்நிலைப்பள்ளிகள் 7532. இதில் 2478 பள்ளிகள் 100 சதவிகித தேர்ச்சி பெற்றுள்ளன. 26 ஆயிரத்து 352 மாணவ - மாணவியர் பல்வேறு பாடங்களில் 100க்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இது சாதாரண சாதனையல்ல.

**ஐ.ஐ.டி. போன்ற உயர் கல்வி நிறுவனங்களுக்குள் 2022ஆம் ஆண்டு 75 மாணவர்கள் சென்றனர். 2023இல் அந்த எண்ணிக்கை 274 ஆனது. இந்த ஆண்டு அது இரண்டு மடங்காகி, 415 மாணவர்கள் இதுவரை தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். கல்லூரிக்கு வரும் மாணவியர் எண்ணிக்கை 34 விழுக்காடு உயர்ந்துள்ளது.**

அகில இந்திய உயர்கல்வி ஆய்வு நிறுவனத்தின் (AISHE) கூற்றுப்படி உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் (GER) 49 விழுக்காடு பெற்று இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. இது அகில இந்திய சராசரி சதவிகிதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம் ஆகும். இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம் இருக்கின்றன. தமிழ்நாட்டை நோக்கி உலகப்புகழ் பெற்ற நிறுவனங்கள் வருவது, மிகச் சிறந்த அறிவுக் கூர்மையுள்ள இளைஞர்கள் இங்கு பணியாளர்களாகக் கிடைப்பது தான். இவை அனைத்தும் தமிழ்நாட்டின் கல்வித் துறை வளர்ச்சிக்கான சாட்சியங்கள்.

**ஒவ்வொரு அரசு மேல்நிலைப்பள்ளியிலும் Hitech labகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதற்கான நுழைவுத் தேர்வுகளின் பாடத் திட்டங்களும் மாதிரி வினா விடைகளும் அனிமேசனுடன் விளக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.3500க்கும் மேற்பட்ட சிறந்த காணொலிகளாக இவை இருக்கின்றன.' நான் முதல்வன்' இணையதளம் வாயிலாக கடந்த 10 ஆண்டு கேள்வித் தாள்களும் ஆங்கிலம், தமிழ், இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை எல்லாம் ஆளுநருக்குத் தெரியுமா?**

இவர் வந்த பிறகுதான் பல்கலைக் கழகங்கள் வளர்ந்ததைப் போலவும் இதற்காகவே மூன்று மாநாடு நடத்தியதாகவும் முன்பு ஒருமுறை பேசினார் ஆளுநர். மூன்று கூட்டம் நடத்தியதால்தான் எல்லாப் பல்கலைக் கழகமும் முன்னேறியதைப் போல அவராக கற்பனைத் தேரில் ஊர்வலம் வருகிறார்.

'பாடத்திட்டத்தில் தரமில்லை, அதனால் வேலை கிடைக்காது' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார் ஆளுநர். ஒரு நல்லரசு என்பது வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும்.' ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை' என்று பிரதமர் மோடி 'அல்வா' கொடுத்தார். அதுபோல இல்லாமல் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருபவராக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 31 லட்சம் பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் 9 லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை தமிழ்நாட்டை நோக்கி ஈர்த்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

திறன்மிகு தொழிலாளர்கள் உள்ள மாநிலம், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் கொண்ட மாநிலம் என்று பல்வேறு சிறப்பம்சங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது. 300க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்கள் திட்டத்தினை நிறுவியுள்ளன. **முதலமைச்சர் அவர்கள் இப்போது அமெரிக்காவில் இருக்கிறார். கூகுள், ஆப்பிள், மைக்ரோசாப்ட் ஆகிய உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள் அவரை அழைத்து தங்கள் நிறுவனத்தை பார்வையிட வைத்துள்ளன. அங்கெல்லாம் தமிழ்நாட்டு இளைஞர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழில் வரவேற்பைக் கொடுத்துள்ளார்கள். பாவம், ஆளுநருக்கு இதையெல்லாம் பார்த்து வயிறு எரிகிறது போலும்!**

தமிழ்நாட்டைப் பிடிக்கவில்லை என்றால் போக வேண்டியதுதானே? பீகாருக்கு! ஒரு மாத காலத்தில் பத்துக்கும் மேற்பட்ட பாலம் இடிந்துள்ளது. அதன் 'தரத்தை' தினந்தோறும் போய் மதிப்பிடலாமே?!

## வண்டலூர் அறிஞர் அண்ணா

# உயிரியல் பூங்கா மேம்பாட்டுக்கு சன் டி.வி. ரூ.4.42 கோடி நிதி!

சென்னை, செப். 5 -

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மேம்பாட்டுக்காக சன் டி.வி. இந்த ஆண்டு மேலும் ரூ.4.42 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த சன் டி.வி. 5 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியது.

இதற்கான காசோலையை, தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் சீனிவாச ரெட்டி மற்றும் அதிகாரிகளிடம் சன் டி.வி. சார்பில் காவேரி கலாநிதி மாறன் கடந்த ஆண்டு வழங்கினார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவு நேரத்தில் நடமாடும் வவ்வால், ஆந்தை உள்ளிட்ட பறவைகள், தேவாங்கு, புனுகுபூனை, முள்ளம் பன்றி ஆகிய விலங்குகளின் நடமாட்டத்தை நிலவு வெளிச்சத்தில் பார்க்கும் வித்தியாசமான அனுபவம் தரும் கண்காட்சி அரங்கம் புதுப்பொலிவுடன் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், வண்டலூர் உயிரியல் பூங்காவின் மேம்பாட்டு வளர்ச்சிக்காக சன் டி.வி. குழுமம் சார்பில் இந்த ஆண்டு மேலும் 4 கோடியே 42 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை சன் டி.வி. குழுமம் சார்பில் காவேரி கலாநிதி மாறன், பூங்காவின் இயக்குனர் ஆஷிஷ் குமார் வத்சாவாவிடம் வழங்கினார்.

இந்த நிதியை பயன்படுத்தி அண்ணா உயிரியல் பூங்காவில் குரங்குகள், நரிகளுக்கான இரவு நேர கூடங்கள் மற்றும் மான் உலாவும் இடங்களை சீரமைக்கவும், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மேலும் 6 பேட்டரி வாகனங்கள், 28 பயணிகள் பயணிக்கும் வகையிலான 2 சவாரி வாகனங்களை வாங்கவும் பயன்படுத்த உள்ளதாக பூங்கா அதிகாரிகள் கூறினர்.



வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த சன் டி.வி. குழுமம் சார்பில் 5 கோடி ரூபாய்க்கான காசோலையை திருமதி காவேரி கலாநிதி மாறன், தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் சீனிவாச ரெட்டியிடம் வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

## வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் - கோவை - ஈரோடு -

# திருப்பூர் மாவட்டங்களுக்கான - மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலை!

கோவை, செப். 5-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (03.09.2024) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/ அரசு முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர்/ முதன்மை செயலாளர் கோ.பிரகாஷ் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, வேளாண்மைத் துறை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர். கணபதி. ப. ராஜ்குமார் (கோயம்புத்தூர்), கா.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), பிரகாஸ் (ஈரோடு), தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர்.வி.கீதாலெட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா, வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன், இணை இயக்குநர் வேளாண்மைத் துறை வெங்கடாச்சலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. மல்லிகா மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, ஒவ்வொரு திட்டத்திற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்கினை விட அதிகமாக எய்திட துறை அலுவலர்களுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

வேளாண்மை துறை சார்பில் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.3.14 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி பம்பு செட், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சம் மதிப்பில் பவர் டில்லர்களையும், என மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ.26.14 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.

பின்னர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறை மண்டலஅளவிலான அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கடந்த 7-8 மாதங்களுக்கு முன்பு தென்னை மரங்கள் தென்னை வாடல் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், நேரடியாக திருப்பூர், பொள்ளாச்சி விவசாயிகளுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டு, எந்த இடங்களில் பாதிப்பு இருக்கிறது என்பது தொடர்பாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் ஒவ்வொரு தென்னை தோப்புவாரியாக நேரடியாகச் சென்று களஆய்வு செய்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தென்னை வாடல் நோயால் அதிகமாக பாதிக்கப்பட்ட மரங்களை நீக்குவதற்கும், அருகில் உள்ள தென்னை மரங்களுக்கு இந்நோய் பரவாமல் தடுக்கவும் ரூ.72கோடி மதிப்பீட்டில் நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது. தென்னை வாடல் நோய் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைந்துள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு நெல் ஊக்கத்தொகையாக இது வரை ரூ953 கோடியும், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர் காரணத்தால் பாதிக்கப்பட்ட 13 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.942. கோடி நிவாரணத் தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 46 இலட்சம் இலவச தென்னங்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து, அவர்களிடம் கேட்டறிந்து விரைவாக தீர்வு காணப்பட்டு வருகின்றது. என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறை மண்டல அளவிலான அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த மாவட்டங்களில் வேளாண்மையை எவ்வாறு மேம்படுத்தவேண்டும், விவசாயிகள் எந்த பயிர்களை விளைவிப்பதில் அதிகமாக ஈடுபடுகிறார்கள், விவசாயிகளை எவ்வாறு ஊக்கப்படுத்துவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. விவசாயிகள் உணவுக்கான பயிர்களை உற்பத்தி செய்கின்றபோது அவை உடல்நலத்தை பாதுகாக்கின்ற வகையில் உற்பத்தி செய்யவேண்டும். இலக்கை விட அதிகமான உணவு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூட்டம் மூன்று மாவட்ட விவசாயிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



புதுக்கோட்டை அபிராமி நகரில் எம்.பி. நிதியில் கட்டப்பட்ட ரூ 10 லட்சம் மதிப்புள்ள அங்கன்வாடி கட்டிடத்தை எம்.எம்.அப்துல்லா எம்.பி. திறந்து வைத்து, அரசு சார்பாக வழங்கப்படும் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் என்.சாத்தையா, கி.சுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர்வே.ராஜேஷ் மற்றும் தி.மு.க. நகர நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.